**O.S.No.17/2023**

வா.சா.2 திரு.முனியசாமி

நாள் : 30.06.2025 நேரம் : 01.25 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான் வாதி சொன்னதால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கின் வாதியிடம் இறந்துபோன குருசாமி நாடார் பணம் பெற்றபோது ஏதேனும் கிரைய ஒப்பந்தமோ வேறு ஆவணமோ ஏற்படுத்தினாரா என்றால் தனது பத்திரத்தை கொடுத்துதான் பணம் பெற்றார். மேற்படி பணம் பெற்றபோது ஆவணங்கள் ஏதுவும் ஏற்படுத்தாமல் வாய்கிரையமாகத்தான் குருசாமிநாடார் வாதியிடமிருந்து பணம் பெற்றார். மேற்படி பணம் பெற்று தற்போது 33 வருடங்கள் ஆகின்றன இதற்கிடையில் வாதி தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு எந்தவித முயற்சிகளும் எடுக்கவில்லை என்று சொன்னால் நான் எனது குழந்தைகளின் படிப்பிற்காக பரமக்குடியில் வசித்து வந்ததால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்புதான் தாவாச் சொத்தைப் பொறுத்து வாதியின் பெயருக்கு கிரையம் எதுவும் ஏற்படவில்லை என்ற விவரம் எனக்கு தெரிந்தது. வாதி எனது சித்தப்பா மகன் ஆவார். 5ம் பிரதிவாதியின் மருமகன் பாண்டி பெருமாள் கோவில் கிராமத்தில் மு.வ.எண்.55/2018, 34/2019, 93/2022 ஆகிய வழக்குகளை தாக்கல் செய்து கிராமத்தின் எதிர்ப்பை மீறி வெற்றி பெற்றதால் ஊர்க்காரர்கள் தூண்டுதலின்பேரில் வாதி எவ்வித முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார், அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் இறந்துபோன குருசாமி வாய்க்கிரையம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 1.40 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.06.30 17:14:13 +0530

**O.S.No.15/2023**

வா.சா.1 திரு.முருகேசன்

நாள் : 30.06.2025  நேரம் : 12.50 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

நான் டாஸ்மாக் நிறுவனத்தில் உதவி சேல்ஸ்மேனாக பணிசெய்து வருகிறேன். நான் வழக்கு பிராதில் விவசாயம் செய்துவருவதாக சொல்லியுள்ளேன் என்றால் டாஸ்மாக் நிறுவனத்தில் எனக்கு நிரந்தர வேலையல்ல. நான் விவசாயமும் செய்துவருகிறேன். நான் எந்த சர்வே எண் சொத்தை உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சர்வே எண் 300/36 ஐ உரிமை கோருகிறேன். சர்வே எண் 300/37 க்கு கிழக்கேதான் தாவா சொத்து சர்வே எண் 300/36 உள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 300/37 க்கு நாகன் பேரில் பட்டா உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி நாகன் என்பவரின் மனைவிதான் 1ம் பிரதிவாதியாவார். இவரது மக்கள்தான் 2 முதல் 5 பிரதிவாதிகள் ஆவார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி நாகன் இறந்துவிட்டார். மேற்படி நாகன் என்பவரின் இறப்பிற்குபின் சர்வே எண் 300/37 ல் உள்ள சொத்தை வாரிசு முறையில் இந்த வழக்கின் பிரதிவாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான். சர்வே எண் 300/37 ல் எனக்கு எந்த பாத்தியமும் கிடையாது என்று சொன்னால் சரிதான். மேற்படி சர்வே எண் 300/37 ல் நான் இடையூறு செய்வதாக சொல்லி இந்த வழக்கின் பிரதிவாதி என்மீது இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி முந்தைய வழக்கு எண் மு.வ.எண்.34/2015 என்று சொன்னால் சரிதான். மேற்படி மு.வ.எண்.34/2015 ல் சர்வே எண் 300/37 ஐ பொறுத்து எனக்கு எதிராக விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியிருந்தார் என்று சொன்னால் சரிதான். மேற்படி மு.வ.எண்.34/2015 வழக்கில் இந்த வழக்கின் பிரதிவாதிக்கு என்ன பரிகாரம் கிடைத்தது என்றால் 6.4 மீட்டர் சொத்து மட்டும் அவருக்கு பாத்தியப்பட்டது என தீர்ப்பு ஏற்பட்டது. நான் தவறாக வடபுரம் கிழமேல் 7.4 மீட்டருக்கு பதிலாக 6.4

மீட்டர் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி மு.வ.எண்.34/2015 வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.6 தீர்ப்பாணை சொத்துவிபரத்தில் கிழமேல் 3 அடி அகலமும் தென்வடல் 38 அடி நீளமும் ஆகமொத்தம் 114 சதுரஅடிகள் கொண்ட காலிமனை நிலம் என கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முந்தைய வழக்கின் சொத்து நான் தற்போது கட்டியுள்ள வீட்டின் மேற்கு திசையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கின் பிராது சொத்துவிபரத்தில் ஆக மேற்புறம் வடக்குதிசையில் கிழமேல் 2 அடி, தென்வடல் 37 1/2 அடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்குச் சொத்து எனது வீட்டிற்கு எந்த திசையில் உள்ளது என்றால் மேற்குத்திசையில் உள்ளது. மேற்படி மு.வ.எண்.34/2015 வழக்கில் உள்ள சொத்தும் இந்த வழக்கின் சொத்தும் ஒன்றுதான் என்று சொன்னால் சரிதான். மேற்படி மு.வ.எண்.34/2015 வழக்கிற்கு எதிராக மேல்முறையீடு ஏதும் செய்தேனா என்றால் இல்லை. ஏற்கனவே முந்தைய வழக்கில் தீர்மானிக்கப்பட்ட விவரத்தைப் பொறுத்து அதே சொத்துக்கு அதே தரப்பினருக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடை சட்டத்தால் தடைசெய்யக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா சர்வே எண்ணுக்குரிய பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்துக்குரிய பட்டாவை தாக்கல் செய்தால் எனக்கு மொத்தம் எவ்வளவு அளவு சொத்து பாத்தியம் என்பது தெரியும் என்றால் பத்திரத்திலேயே அளவு உள்ளது. முந்தைய பட்டாவில் உள்ள விஸ்தீரணத்திற்கும் கூடுதலாக பத்திரம் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 புலப்பட நகலில் சர்வே எண் 300/37 வடபுறத்தில் கிழமேல் அளவாக 6.4 மற்றும் 1.0 மீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 6.4 மீட்டர் மட்டும்தான் 1.0 மீட்டர் கிடையாது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.22 PM

சாட்சியின் கையொப்பம்.

<u>O.S.No.69/2018</u>

<u>வா.சா.3 திருமதி. பாப்பா</u>

நாள் : 30.06.2025 நேரம் : 12.20 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேனா என்றால் அழைப்பாணை எதுவும் வரவில்லை வாதி அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண், பட்டா எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். தாவாச் சொத்து இருளத்தேவர் என்பவருக்கு பாத்தியம் என்று சொல்வதற்கான ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. தாவாச் சொத்துக்களை பொறுத்து நாங்கள் பாகப்பிரிவினை ஏதும் செய்துள்ளோமா என்றால் பாகம் பிரிக்கவில்லை ஆனால் எனது தம்பி வாதிக்கு தாவாச் சொத்தின் பாத்தியத்தை ஒப்படைத்துவிட்டோம். தாவாச் சொத்துக்களைப் பொறுத்து இருளத்தேவருக்கோ, வாதி வகையறாவுக்கோ எந்த பாத்தியமோ அல்லது அனுபவமோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாச்சொத்துக்களை பிரதிவாதிதான் அனுபவம் செய்துவருகிறார் என்று சொன்னால் சரியல்ல வாதிதான் அனுபவம் செய்துவருகிறார். நானும் என்னுடன் பிறந்த நாகவள்ளியும் தாவாச் சொத்துக்களை எனது தம்பியான வாதிக்கு விட்டுக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாவாச் சொத்துக்களை வாதிக்கு எந்த வருடம் விட்டுக்கொடுத்தோம் என்பதை குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் குறிப்பிட்டு சொல்ல இயலாது. வாதி எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்துக்கள் பிரதிவாதியின் பாத்திய அனுபவத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்:12.30 PM

சாட்சியின் கையொப்பம்.